**B 914** **BTA 2**

B.Ed. DEGREE EXAMINATION, DECEMBER 2010

(For candidates admitted during the academic year 2008–2009)

Optional Subject — TAMIL — PAPER II

Time : 3 hours Maximum marks : 75

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

ஏதேனும் பத்து மிகச்சிறு வினாக்களுக்கு விடை தர வேண்டும்.

ஒவ்வொரு விடையும் அரைப்பக்கத்திற்கு மிகாமல் அமைதல் வேண்டும்.

விடை ஒன்றிற்கு 2 மதிப்பெண்கள்.

1. கல்வியின் நோக்கங்கள் யாவை?

2. மெய்யொலிகளை இலக்கண நூலார் எத்தனை வகைப்படுத்துவர்? அவை யாவை?

3. இயற்கைச் சூழல் மொழி வளர்ச்சிக்குக் காரணமாகிறது என்பதற்கு இரு சான்றுகள் தருக.

4. கற்பனை எத்தனை வகைப்படும், அவை யாவை?

5. செய்யுள் நலம் பாராட்டலில் சுவையுணர் திறன் மூலம் நீ காணும் நயங்கள் யாவை?

6. சங்க காலத்து இசைத்தமிழ் கூறுகள் பற்றிச் சிறு குறிப்பு வரைக.

7. தமிழ் ஆட்சி மொழியாவதால் ஏற்படும் பயன்களுள் நான்கினைக் குறிப்பிடுக.

8. தனிநிலை எழுத்து – குறிப்பு வரைக.

9. நாவலுக்குரிய இலக்கணம் யாது?

10. கையெழுத்து பிரதிகளின் பயன்கள் யாவை?

11. பொதுக்கல்வி மூலம் அறிவியல் கல்வியை எவ்வாறு மேம்படுத்தலாம்?

12. எழுதுதல் திறனை வளர்க்கப் பன்முக ஊடக முறை எவ்வாறு பயன்படுகிறது?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

ஒவ்வொரு விடையும் ஒரு பக்கத்திற்கு மிகாமல் அமைதல் வேண்டும்.

விடை ஒன்றிற்கு 5 மதிப்பெண்கள்.

13. மனித வாழ்க்கையில் செய்தித் தொடர்பின் பங்கு யாது?

14. பண்பாட்டில் பின்தங்கிய வகுப்பினர்க்கான ஈடுசெய்யும் கல்வி முறை பற்றி எழுதுக.

15. புலனுணர் உறுப்புகள் மற்றும் இயங்கும் உறுப்புகள் பற்றி எழுதுக.

16. உ.வே.சாமி நாதய்யரின் உரைத்திறம் பற்றி எழுதுக.

17. தமிழிலுள்ள பிறமொழிச் சொற்கள் பற்றி எழுதுக.

18. உரிசொல் என்றால் என்ன? அதன் வகைகளைச் சான்றுகளுடன் விளக்குக.

19. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அல்லது நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளையின் பாடல்கள் மூலம் குழந்தை இலக்கியத்தின் பயன்களைப் பட்டியலிடுக.

20. சங்க காலத்திலிருந்த பெண் கல்வியின் நிலை பற்றி விளக்குக.

பகுதி இ — ($2 \times 15 = 30$ மதிப்பெண்கள்)

இரண்டு கட்டுரை வினாக்களுக்கு விடை தர வேண்டும்.

ஒவ்வொரு விடையும் மூன்று பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும்.

விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.

21. (அ) மொழியின் தொன்மை பற்றிக் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) திருக்குறள் உரையாசிரியர் பரிமேலழகரின் உரைத்திறம் பற்றி ஆய்க.

22. (அ) சிலப்பதிகாரத்திலும், பக்தி இலக்கியங்களிலும், காணப்பெறும் இசை வடிவங்களைப் பற்றி ஆய்ந்து எழுதுக.

(அல்லது)

(ஆ) மொழி பயன்படும் பல்வேறு சூழல்களை விளக்கி வரைக.